**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**OS No.25/2022**

2024-ம் ஆண்டு ஜுன் திங்கள் 14-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தாமோதரன் | தந்தை பெயர் | சண்முகம் |
| கிராமம் | கந்தர்வகோட்டை | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 58 | தொழில் | மருத்துவ உதவியாளர் |

நாள் : 14.06.2024

வா.சா.3

<u>குறுக்கு விசாரணை</u>

நான் பிரவீனா மருத்துவமனையில் உதவியாளராக 5 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு சுந்தம்பட்டி கூட்டுறவு சொசைட்டியில் பணி செய்தேன் என்றால் சரிதான். நான் கூட்டுறவு சொசைட்டியில் போலியான ஆவணங்கள் தாக்கல் செய்து போலியாக நியமனம் செய்யப்பட்டதாக விடுவிப்பு செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. மேற்படி வழக்கில் நான் 3,51,997/-ரூபாய் தண்டத்தீர்வை செலுத்துமாறு உத்தரவாகியுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது புதுக்கோட்டை கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளரால் தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் கோரப்பட்டதன் அடிப்படையில் நான் தண்டத்தீர்வை செலுத்தவேண்டும் என்று கொடுக்கப்பட்ட தகவல் என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு எந்த உத்தரவும் கிடையாது.

பிரதிவாதியின் மகன் செந்தில், அவரது தம்பி மீது நான் புகார் கொடுத்து வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான், அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். சாபர்சாதிக் பிரதிவாதியின் மகன்களுக்கு எதிராக கொடுத்த வழக்கில் நான் பிரதிவாதி குடும்பத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான், சாபர்சாதிக்கை நான்தான் மருத்துவமனையில் சேர்த்தேன். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல், நிலுவையில் உள்ளது. நான் சொல்வதுபோல் வழக்கு நிலுவையில் இல்லை என்றாலும் சிசி 99/2023 என்ற வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் சரியல்ல.

பிரதிவாதியின் மகன் செந்தில், மற்றும் அவரது மனைவி விசாலாட்சி, இராஜேந்திரன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு எண் OS 15/2007 ல், நான் இராஜேந்திரனுக்கு சாதகமாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி சுரேந்திரபாபுவின் சகோதரர் ராதாகிருஷ்ணனுக்கு பவர் ஏஜெண்ட்டாக இருந்து இந்த பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு

எதிராக நான் OS 88/2019 என்ற வழக்கு நடத்திவருகிறேன் என்றால் சரிதான். நான் ஆரம்ப காலத்திலிருந்து வெகு காலமாக பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி சுரேந்திரனுக்கு தாவா சொத்து சொந்தம் என்பதற்கு ஏதேனும் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்ன ஆவணத்தை நான் பார்த்தேன் என்றால் 1934ம் வருடம் ஏலம் எடுத்த ஆவணத்தை பார்த்துள்ளேன். நான் எந்த வருடம் அந்த ஆவணத்தை பார்த்தேன் என்றால் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு நான் அந்த ஆவணத்தை பார்த்தேன். அந்த ஆவணத்தை யார் என்னிடம் காண்பித்தது என்றால் ராமநாதன் செட்டியார். ராமநாதன் செட்டியார் என்னிடம் காண்பித்த சொத்தில் அதனுடைய சர்வே எண், நான்கெல்லை, விஸ்திரணம் இருந்தது என்றால் சரிதான். நான் பார்த்ததாக சொல்லக்கூடிய ஆவணத்தில் என்ன சர்வே எண் எழுதப்பட்டிருந்தது என்றால் பழைய புல எண் 188/2, புதிய புல எண் 361/16 , விஸ்திரணம் சுமார் 4 செண்ட். மேற்படி விபரங்கள் நான் பார்த்ததாக சொல்லும் ஆவணத்தில் கண்டு எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

பாகம் பிரித்ததாக சொல்லும் நேரத்தில் நான் அந்த பாகப்பிரிவினையில் கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். எனவே அந்த பாகத்தில் யாருக்கு என்ன சொத்து எவ்வளவு, பிரித்துக்கொள்ளப்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி வழக்கு சொத்தை பொறுத்து என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பட்டா கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

நான் எனது முதல் விசாரணையில் தாவா சொத்து வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் தாவா சொத்து வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளதற்கு ஏதேனும் ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் அவர்கள் வாய்மொழியாகதான் பாகம் பிரித்துக்கொண்டார்கள்.

தாவா சொத்து வாதிக்கு பாகப்பிரிவினையில் கிடைத்ததாக நானாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, பஞ்சாயத்தில் பிரித்துக்கொண்டதில் எனக்கு தெரியும். யார் சொன்னது என்றால் என்னுடைய சின்ன தாத்தா சொன்னார், அவர் தற்சமயம் உயிருடன் இல்லை. அந்த பஞ்சாயத்தில் உள்ள வேறு நபர்கள் யார் என்றால் பாஸ்கரன் செட்டியார் உள்ளார், அவர் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார், மோகன்தாஸ் என்ற சங்கரவடிவேல் செட்டியார் மற்றும் பழனியப்ப செட்டியார் உள்ளார்.

வழக்கு சொத்து பொறுத்து வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மருத்துவர் சுரேந்திரனும் நான் பணிபுரியும்மருத்துவமனையின் மருத்துவர் பிரவீனும் பங்காளி உறவு என்றால் சரிதான். வாதி

சுரேந்திரன் மருத்துவர் பிரவீனிடம் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தில் மின்இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் மின்இணைப்பு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக மின்இணைப்பு இல்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில்லுள்ள பிரதிவாதி வீட்டிற்கு வீட்டுவரி விதிப்பு ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, அது வேறு வீட்டிற்கு உள்ள இரசீது. எந்த இரசீதை நான் பிரதிவாதியின் வீட்டிற்கு உரியது கிடையாது என்று சொல்கிறேன் என்றால் நான் பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தில் விசாரித்து பிரச்சனை செய்தேன்.

தாவா சொத்துயை பொறுத்து வாதிக்கும் பிரதிவாதி மங்கையற்கரசிக்கும் நடந்துவரும் வழக்கில் வழக்கு சொத்தில் ஏற்பட்டுள்ள இரசீது தொடர்பாக நான் எதற்காக பஞ்சாயத்து போர்டில் பிரச்சனை செய்தேன் என்றால் அது எங்கள் வீட்டின் பின்புறம் உள்ள இடத்திற்கும் சேர்த்து இரசீது போட்டுள்ளதால் , வழக்குள்ளது என்று கொடுக்ககூடாது என்று பிரச்சனை செய்தேன். என் இடத்தையும் சேர்த்து இரசீது போட்டதற்காக நான் பஞ்சாயத்தில் மனு கொடுத்தேனா என்றால் மனு கொடுத்துள்ளேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் முடியாது. நான் எவ்வித மனுவும் கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் சொல்வதுபோல் எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் வாதியோ, வாதியின் முன்னோர்களோ அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் ஆரம்பத்திலிருந்து பிரதிவாதிதான் வீடுகட்டி குடியிருந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் சுரேந்திரனுக்கு வேண்டியவர் என்பதாலும், பிரதிவாதியின் குடும்பத்தோடு எனக்கு ஏற்பட்டுள்ள தனிப்பட்ட விரோதத்தினாலும், உண்மைக்கு மாறாக வாதிக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.